# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.02.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 4311/SCIC/2022**

திரு வாராகி — புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட மேலாளர்,
தமிழ்நாடு மாநில வாணிப கழகம், --- பொது அதிகார அமைப்பு
டாஸ்மாக் லிட்,
திருவள்ளூர் (மேற்கு) மாவட்டம்.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 10.11.2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிப கழகம், திருவள்ளூர் என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில், பொதுமக்களிடம் அரசு மதுபான சில்லரை விற்பனை கடைகளிலிருந்து விற்கப்படும் மதுபான பாட்டில்களுக்கு ஜி.எஸ்.டி வரி வசூலிக்கப்படுவதென்றால் எத்தனை சதவிகிதம் வசூலிக்கப்படுகிறது என்றும், விலக்களிக்கப்பட்டிருந்தால் அதற்கான ஆவண நகல்கள் சான்றொப்பமிட்டு வழங்குமாறும், தங்கள் மாவட்டத்தில் உள்ள

மதுபான சில்லரை கடைகள் எண்ணிக்கை மற்றும் அதன் முகவரி என்பன போன்ற தகவல்களை 15 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 01.12.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரர் 13.12.2022 தேதியிட்டு சட்டப்பிரிவு 18(1)ன் கீழ் புகார் மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் CP 4311/2022 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன புகார் மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 03.02.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய நேரடி விசாரணை குறித்து மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர்களுக்கு ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. **தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012-ன் விதி 7(2)-ன் படி மனுதாரர் தவறாமல் ஆணையத்தின் முன்பாக நேரில் ஆஜராக வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகாததை ஆணையம் பதிவு செய்கிறது.** பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு வே. முத்துராமன், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிப கழகம், டாஸ்மாக் லிட், திருவள்ளூர் (மேற்கு) மாவட்டம் நேரில் ஆஜரானார்.

4. மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு பொதுத் தகவல் அலுவலரால் 01.12.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதனையடுத்து இனம் 3 மற்றும் 9க்கான ஆவண நகல்கள் 25.09.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டு ளதாகவும் இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்து, அதற்கான கடித நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து தனது கருத்துக்களை எடுத்துரைக்க மனுதாரருக்கு ஆணையத்தால் ஒரு வாய்ப்பளிக்கப்பட்டும், அவர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை, **எனவே, இந்த புகார் மனுவின் மீதான விசாரணையினை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**((ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4311/SCIC/2022</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட மேலாளர்,
தமிழ்நாடு மாநில வாணிப கழகம்,
டாஸ்மாக் லிட்,
திருவள்ளூர் (மேற்கு) மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு வாராகி,
எண்.2/3, சுத்தானந்த பாரதி தெரு,
கணபதிபுரம், கிழக்கு தாம்பரம்,
சென்னை 600 059

Copy to: File TK/PS